## சுருக்கம்

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை – தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியத்தின் வாயிலாக வழங்கப்பட்டு வரும் விபத்து நிவாரணம், மருத்துவம், கல்வி மற்றும் இதர உதவித் தொகையினை 2023-2024-ஆம் நிதியாண்டு முதல் உயர்த்தி வழங்குதல் - கூடுதல் நிதி ரூ.200.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2)த் துறை

**அரசாணை (நிலை) எண். 19** **நாள்: 12.07.2023,**

**சோபகிருது, ஆனி – 27,**

**திருவள்ளுவர் ஆண்டு, 2054.**

**படிக்கப்பட்டது :**

1. அரசாணை (நிலை) எண்.13, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந-2)த் துறை, நாள் 04.05.2018.
2. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரின் ந.க. எண்.3336/த.மா.ந.வா-1/2023, நாள் 20.05.2023.

******

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2018-2019-ஆம் நிதியாண்டு முதல் மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களுள் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியம் தொடர்பான திட்டம் உட்பட சுமார் 52 நலத் திட்டங்களை வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டிற்குள் செயல்படுத்திட மாற்றுத்திறனாளிகள் நல ஆணையருக்கு அதிகாரப் பகிர்வு (Delegation of Power) வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. இந்நிலையில் 2023-2024-ஆம் நிதியாண்டிற்கான சட்டமன்றப் பேரவை கூட்டத் தொடரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:-

> "தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியத்தின் வாயிலாக வழங்கப்பட்டு வரும் விபத்து நிவாரணம், மருத்துவம், கல்வி மற்றும் இதர உதவித் தொகையினை உயர்த்தி, கூடுதலாக ரூ.200.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்".

3. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் கடிதத்தில் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியத்தில் சுமார் 10.11 இலட்சம் மாற்றுத்திறனாளிகள் உறுப்பினர்களாக பதிவு செய்து பயன்பெற்று வருகின்றனர் என்றும் ஆண்டுதோறும் ரூ.329.62 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கும், அவர்களின் குடும்ப வாரிசுகளுக்கும் கல்வி உதவித் தொகை, மருத்துவச் சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு உதவிகள் இவ்வாரியத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன என்றும் இவ்வாரியம் தொடங்கப்பட்ட 2007-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்ற உதவித் தொகையானது உயர்த்தப்படாமல் அதே தொகை வழங்கப்பட்டு வருவதால் மேற்சொன்ன

உதவித் தொகையினை உயர்த்தும் நோக்கில் கூடுதலாக ரூ.200.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்திட அறிவிப்பு தற்போது வெயிடப்பட்டுள்ளதால் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியத்தின் மூலம் நடைமுறைபடுத்தப்படும் உதவித் தொகையினை உயர்த்தி வழங்க கோரியும், மேலும் படுக்கை நிலையில் உள்ள முதுகு தண்டுவடம் பாதிப்படைந்த மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக, "ஆல்பாபடுக்கை" (Alpha Beds) விரிப்புகள் ரூ.6,000/- மதிப்பில் வாங்குவதற்கான உதவித் தொகை வழங்கவும் கோரியுள்ளதை உள்ளடக்கி உரிய அரசாணை வெளியிட கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரிய மானியம் தொடர்பாக 2023-2024-ஆம் ஆண்டிற்கு, வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் உரிய கணக்கு தலைப்பின் கீழ் ரூ.3,29,62,000/- ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்காணும் தொகையுடன் கூடுதல் நிதி ஒதுக்கீடாக ரூ.200.00 இலட்சம் சேர்த்து மொத்தம் இத்திட்டத்திற்கென 2023-2024-ஆம் நிதியாண்டிற்கு ரூ.5,29,62,000/-யினை ஒதுக்கீடு செய்து அரசாணை வழங்கிட ஆவன செய்யுமாறும் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரின் செயற்குறிப்பினை நன்கு பரிசீலித்த அரசு அதனை ஏற்று மாற்றுத்திறனாளிகளுக்கு தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியத்தின் வாயிலாக வழங்கப்பட்டு வரும் விபத்து நிவாரணம், மருத்துவம், கல்வி மற்றும் இதர உதவித் தொகையினை 2023-2024-ஆம் நிதியாண்டு முதல் கீழ்கண்டவாறு உயர்த்தி வழங்கிட ஏதுவாக ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையுடன் கூடுதலாக ரூ.2,00,00,000/- (ரூபாய் இரண்டு கோடி மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது:-

| வ. எண் | திட்டங்கள் | ஏற்கனவே வழங்கும் தொகை (ரூபாயில்) | தற்போது உயர்த்தி வழங்கப்படும் தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1. | விபத்தினால் இறப்பு | 1,00,000/- | 2,00,000/- |
| 2. | கை அல்லது கால் இழப்பு, இரு கண்பார்வை இழப்பு மற்றும் முழுமையான செயல் இழப்பு | 1,00,000/- | 2,00,000/- |
| 3. | நிரந்தர குறைபாடு தவிர்த்து மருத்துவ செலவினம் | 25,000/- | 50,000/- |
| 4. | "ஆல்பாபடுக்கை" (Alpha Beds) | - | 6,000/- |
| 5. | மாற்றுத்திறனாளியின் மகன் மற்றும் மகள் கல்வி பயில வருடாந்திர உதவித் தொகை | | |
| (அ) | 10-ஆம் வகுப்பு பயிலும் மகள் | 1,000/- | 2,000/- |
| | 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மகன் / பயிலும் மகள் | 1,000/- | 2,000/- |
| (ஆ) | 11-ஆம் வகுப்பு மற்றும் அதற்கு சமமாக பயிலும் மகள் | 1,000/- | 2,000/- |
| (இ) | 12-ஆம் வகுப்பு மற்றும் அதற்கு சமமாக பயிலும் மகள் | 1,500/- | 3,000/- |

| | | | |
|---|---|---|---|
| | 12-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மகன் மற்றும் மகள் | 1,500/- | 3,000/- |
| (ஈ) | இளங்கலை பட்டப்படிப்பு பயின்று வரும் மகன் மற்றும் மகள் | 1,500/- | 3,000/- |
| | இளங்கலை பட்டப்படிப்பு விடுதியில் தங்கிப் பயலும் மகன் மற்றும் மகள் | 1,750/- | 3,500/- |
| | முதுகலை பட்டப்படிப்பு பயின்று வரும் மகன் மற்றும் மகள் | 2,000/- | 4,000/- |
| | முதுகலை பட்டப்படிப்பு விடுதியில் தங்கிப்பயலும் மகன் மற்றும் மகள் | 3,000/- | 6,000/- |
| (உ) | சட்டம், பொறியியல், மருத்துவம். கால்நடை அறிவியல் அல்லது அதற்கு இணையான தொழிற்கல்வி படிப்பு பயிலும் மகன் மற்றும் மகள் | 2,000/- | 5,000/- |
| | விடுதியில் தங்கிப் பயிலும் மகன் மற்றும் மகளுக்கு | 4,000/- | 6,000/- |
| | தொழிற்கல்வி மற்றும் பட்ட மேற்படிப்பு பயிலும் மகன் மற்றும் மகள் | 4,000/- | 6,000/- |
| | தொழிற்கல்வி மற்றும் பட்ட மேற்படிப்பு விடுதியில் தங்கிப் பயிலும் மகன் மற்றும் மகள் | 6,000/- | 8,000/- |
| (ஊ) | தொழிற்பயிற்சி நிலையம் அல்லது தொழில்நுட்ப கல்லூரியில் பயிலும் மகன் மற்றும் மகள் | 1,000/- | 2,000/- |
| | விடுதியில் தங்கிப் பயிலும் மகன் மற்றும் மகளுக்கு | 1,200/- | 2,500/- |

6. மேலே பத்தி-5-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> "2235-சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் – 101 – **மாற்றுத் திறனாளிகள் நலன் – மாநில செலவினங்கள் – CK – மாற்றுத்திறனாளிகளுக்கான நல வாரியத்திற்கு மானியங்கள் – 309 – உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை**"
>
> (IFHRMS DPC: 2235-02-101-CK-30903)"

7. மேலே பத்தி 5-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.2,00,00,000/-ம் 2023-2024-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினம் 2023-2024-ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சிறப்பு நிகழ்வாக கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட மாற்றுத்திறனாளிகள்

நல இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகள் / திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும், கருத்துருவையும் தவறாது நிதி (ச.ந./வ.செ.பொ-I)த் துறைக்கு உரிய நேரத்தில் அனுப்பி வைக்குமாறு மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.25383/நிதி(சந)/2023, நாள் 11.07.2023-ல் பெறப்பட்ட இசைவுடன் மற்றும் கூடுதல் நிதியொதுக்கம் பேரேடு எண்.483 (நானூற்று எண்பத்தி மூன்று) (IFHRMS ASL No.2023070483) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. ஆனந்தகுமார்
அரசு செயலாளர்

பெறுநர்
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர்,சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
(மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம்,
(மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.

<u>நகல்:-</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நிதி (ச.ந/வ.செ.பொது-I&II/வ.வ-I)த் துறை, சென்னை-9.
செயலாளரின் தனிச் செயலாளர்,
மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்
13.07.2023